பட்டறையில் ஒரு நாளைக்கு 3½ பேல் என்று அமைச்சர் தெரிவித்தார்கள். 3½-க்கும் அதிகமாகச் செய்யப்பட்டதாக ஆடிட் ரிபோர்டில் குறிப்பிட்டிருக்கிறது. அப்படி குற்றச்சாட்டு இருந்தால், நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட குற்றச்சாட்டு பற்றித் தகவல் இல்லை.

Prices of yarn supplied to Handloom Industry.

* 307 *Q.*—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to reduce the prices of the yarn supplied to the Handloom Industry in the State?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கைத்தறித் தொழிலுக்கு வழங்கப்படுகிற நூலிழையின் விலைகளைக் குறைக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(1) நூலிழையின் விலையைக் குறைப்பது குறித்து ஆய்வு செய்யவும், பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆலோசனை கூறவும் அரசு சார்புள்ளவர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

(2) பரவலாக்கப்பட்ட துறைக்கு சிக்கெடுக்கப்பட்ட பருத்தி நூலிழையை (carded cotton yard) வழங்குவதற்காக, பருத்தி நூலிழைச் சிறப்புத் தொகுப்புத் திட்டம் இந்திய அரசால் கொண்டு வரப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: கைத்தறி நெசவாளர்களுக்கு சப்ளை செய்யப்படும் நூல் விலை குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வெகு காலமாக இருந்தாலும், இன்னும் கமிட்டி ஸ்டேஜில் தான் இருக்கிறது. குறைந்த பட்சம் அரசுக்குச் சொந்தமான கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் நூலை குறைந்த விலையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுத்தவரையில் சங்கடம் இல்லை. நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து அவ்வப்போது விலை நிர்ணயம் செய்து கொடுக்கப்படுகிறது. இங்கே கேட்டிருக்கும் பிரச்சினை கூட்டுறவுக்கு வராத நெசவாளர்கள் குடும்பங்களுக்குத் தேவையான நூல்கள் பற்றியது. அதன் விலை ஏறும்போது, என்ன செய்ய முடியும் என்பதைப் பார்த்து, நூற்பாலைச் சொந்தக்காரர்களை அழைத்து பேசி குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. நிரந்தரமாக கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் விலையைக் குறைக்க, வரிச் சலுகை கொடுத்தால் எந்த விலை அளவில் குறையும் என்பது யோசனையில் இருக்கிறது.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கைத்தறியாளர்களுக்கு உபயோகமாகும் நூல், "ஹாங்க் யார்ன்" என்று தனியாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகையால் அந்த

1971 ஜூலை 19]

ஹாங்க்குக்கு மட்டும் போடப்படும் சேல்ஸ் டாக்ஸை நீக்குவதால் விலை குறையும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படியொரு கோரிக்கை இருந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : கூட்டுறவு ஆலையில் உற்பத்தியாகக் கூடிய நூல் சில காரணங்களால் கூட்டுறவு ஆலையில் பணியாற்றக் கூடிய கைத்தறியாளர்களுக்குக் கிடைக்காமல் போகிறது. திரும்ப வந்து தனியாருக்குக் கொடுக்கப் படுகிறது என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒன்றும் இருப்பதாக தெரியவில்லை. அந்த அந்த மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நூற் பாலைகள்—கூட்டுறவு நெசவாளர்களுக்காகவே உற்பத்தி செய்கி றார்கள். சில சமயத்தில் பருத்தி விலை உயர்வதால் விலையேறுகின்ற நிலை ஏற்படுகிறபோது நெசவாளர்களுக்கு நூல் விலை உயர்ந்து போகாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் நூற்பாலைகளும் தாங்கள் லாபம் அடைய வேண்டாமா என்கிறார் கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : கூட்டுறவு நூற்பாலைகள் வெளிமார்க் கெட் விலை உயர்ந்தால் நூல் விலையை உயர்த்தியே கூட்டுறவு நெச வாளர் சொசைடிகளுக்குக் கொடுக்கிறார்கள். வெளிமார்க்கெட்டில் விலை குறையும்போது உடனே விலையைக் குறைத்துக்கொள்ள முன் வருவதில்லை. அப்படியின்றி வெளிமார்க்கெட் விலை குறைந்தால் நூல் விலையை அதற்கு ஏற்றாற்போல உடனே குறைத்து நெச வாளர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு நூற்பாலைகள் விலையைக் குறைப்பதில்லை என்ற புகாரை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை. காரணம் அடிக்கடி நம்முடைய இயக்குநர் எல்லா நூற்பாளர்களையும் அழைத்துப் பேசி நியாயவிலையில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க நூல் விலையை அவ்வப் போதுள்ள மார்க்கெட் நிலவரப்படி, கூட்டியோ, குறைத்தோ தான் வருகிறார்கள்.

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தொழிலாளர்களை எடுக்கும்போது கூட்டுறவுச் சங்கங்கள் முன்மொழியவேண்டுமென்ற விதி இருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடுங்கள். அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : நூல் விலை ஏறுவது தொழில் துறையில் இருக்கிற நெசவாளர்களைப் பாதிக்கக்கூடிய விஷயமாக இருக் கிறது. கூட்டுறவு நூற்பாலைகள் நெசவுத் தொழிலாளர்களுக்கு

உதவவேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டன. ஆகவே, மார்க்கெட் விலையைக் கணக்கிட்டு குறைந்த விலையில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விலையை குறைத்துக்கொடுப்பது என்பது வேறு. கூட்டுறவு நெசவாலைகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவது என்பது வேறு. இரண்டாவதை ஒப்புக்கொள்ள முடியாது.

Rise in price of silk sarees.

*308 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware of the increase in prices of Kancheepuram, Kollegal, etc., sarees in the State; and

(b) if so, the action taken to arrest the rise in prices?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) கச்சாப்பட்டு, சரிகை, வண்ணச் சாயம், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றின் விலை உயர்வினால் பட்டுச் சேலையின் உற்பத்தி மதிப்பு உயர்ந்ததன் காரணமாக பட்டு சேலையின் விலையும் உயர்ந்துள்ளது. இவற்றில் ஒரு சில கச்சாப் பொருள்கள் மைசூர், குஜராத் போன்ற மாநிலங்களிலிருந்து வாங்கவேண்டியுள்ளது. அங்கு இதற்கென என்று விலைக்கட்டுப்பாடும் இல்லை. இருப்பினும் கச்சாப்பட்டின் விலையினைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மத்தியப் பட்டு வாரியமும் இந்திய அரசும் கேட்டுக்கொள்ளப்பட்டன. கொள்ளேகால் தமிழ் நாட்டில் இல்லை.

திரு. கி. ஜெயராமன்: நம்முடைய மாநில கைத்தறி கார்ப்பரேஷன் மூலமாக தனியாருக்கும், கூட்டுறவு சங்கத்திற்கும் சாய மருந்து நியாயவிலையில் வாங்கிக் கொடுப்பதுபோல் மைசூரிலிருந்து பட்டு நூலையும் அரசே வாங்கித் தர முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வாங்குவதில் சிக்கல் இல்லை. அடிக்கடி மைசூரில் இருந்து கச்சாப் பட்டு கிடைக்காத காரணத்தினால், வெளிநாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிற காலத்தில் விலை உயர்வு ஏற்படுகிறது. சில்க் போர்டு இதை கவனத்தில் கொண்டு நெசவாளர்கள் பாதிக்கப்படாதிருக்க வழிவகை செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: மாநிலத்தில் இருந்து அனுப்பப்படும் பட்டுப் பொருள்களின் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணி மாநிலத்திற்கே கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது பட்டுச் சேலையின் விலை உயர்வைப் பற்றியது.